247

ஸ்ரீ சேது புராணம்

O-1, 86MNP, R
N24
183840.

532

உ

சிவமயம்.

# இரதிபுலம்பல்.



16 SEP 1924

ன்னை.

ச்சுக்கூடத்தில்

பட்டது.

4

O-,86MMP,R
N29
183840

உ

சிவமயம்.

மன்மதன் தகனமான பிறகு

# இரதிதேவி புலம்பல்.

மூன்றுபாகமும் அடங்கியது.

இவை சிதம்பரம்

நாராயணபிள்ளையால் இயற்றப்பட்டது.

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

3
894.811
2862
16 DEC 1924

உ

கடவுள் துணை.

மன்மதன் தகனமான பிறகு

# இரதிதேவி புலம்பல்.


RBMMP, R
NY


ஒப்பாரிக்கண்ணி முதற்பாகம்.

## விநாயகர் துதி.

பிஞ்சுமதியணிந்த பெம்மான்மேற்போர்புரிந்த
பஞ்சபாணன்பாரி பாடுதற்கு-எஞ்ஞான்றும்
பரிவுடனேதில்லைப் பதியதனில் வாழுங்
கரிமுகவன் செஞ்சரணங் காப்பு.

## கண்ணிகள்.

மூலமுதலாதாரம் மூன்றுசுழிமுனையிற்
மும்மண்டலத்துடனே முட்டிநின்றபச்சைநிறம்
மூவழிச்சாரணன்கண்டுமுடிவணங்கி நமஸ்கரித்தேன்
மூலமுதலாயுள்ள மூர்த்தியுள்ளபிள்ளையாரே.

## கதையின் வரலாறு.

[illegible] என்ராஜாவேமந்திரியே
மன்மதராஜாவே அழகுசிகாமணியே
சிங்கமுகத் தூணிற்[illegible]
[illegible]பாதம்போலே என்ராஜாவேமந்திரியே
இங்கிருக்கத்தேடுறேனே
அத்தியிளந்தோட்டம் என்ராஜாவேமந்திரியே-நான்
ஆளில்லாப்பூந்தோட்டம்


தமிழ்நாடு [illegible] காப்பகம்
183[illegible]

முருங்கையிளங்தோட்டம் என்ராஜாவேமந்திரியே
மூப்பனில்லாபூக்தோட்டம்
சத்திரத்துவாழை என்ராஜாவேமந்திரியே
சமுத்திரத்துநீர்வாழை
முத்தத்துவாழை என்ராஜாவேமந்திரியே
முகம்சோர்ந்துநிற்கிறேனே
கண்ணுக்குமையுமிட்டு என்ராஜர்வேமந்திரியே
கடைத்தெருவேபோனாலும்
கண்ணுமலங்காரம் என்ராஜாவேமந்திரியே
கடைத்தெருவுஞ்சிங்காரம்
நெத்திக்குபொட்டுமிட்டு என்ராஜாவேமந்திரியே
நெடுந்தெருவேபோனாலும்
நெத்தியலங்காரம் என்ராஜாவேமந்திரியே
நெடுந்தெருவுசிங்காரம்
முந்தாணிக்குள்ளே என்ராஜாவேமந்திரியே
முடிந்திருந்தகைசிறையை
வந்தாதரித்திடுவாய் என்ராஜாவேமந்திரியே
வல்வினையைதீர்த்திடுவாய்
நான்கட்டுகயறவிழ்த்தேன் என்ராஜாவேமந்திரியே
களறியிலேபூவவிழ்த்தேன்
வெள்ளிகயறவிழ்த்தேன் என்ராஜாவேமந்திரியே
வீதியிலேபூவவிழ்த்தேன்
சாந்துமணக்குது என்ராஜாவேமந்திரியே
தையலிடபள்ளியறை
புனுகுமணக்குது . என்ராஜாவேமந்திரியே
பொற்கொடியாள்பள்ளியறை

தச்சரறியாதே என்ராஜாவேமந்திரியே
தங்கரதம்சொப்பனிட்டேன்
தங்கரதம்சொப்பனிட்டேன் என்ராஜாவேமந்திரியே
ஸ்தலமும்தெரியலியே
வேடனறியாதே என்ராஜாவேமந்திரியே
வெள்ளிரதம்சொப்பனிட்டேன்
வெள்ளிரதம்போன என்ராஜாவேமந்திரியே
விதமும்தெரியலியே
மந்தாரைபூற்கும் என்ராஜாவேமந்திரியே
மகடம்புசாவடியே
செந்தாரைபூற்கும் என்ராஜாவேமந்திரியே
சித்திரப்பூச்சாவடியே
தங்கத்தமுக்கடிக்கும் என்ராஜாவேமந்திரியே
தாசீலுவந்திரங்கும்
தாசீலுகையமர்த்தும் என்ராஜாவேமந்திரியே
தாஷ்டீகரில்லையே
பொன்னுந்தமுக்கடிக்கும் என்ராஜாவேமந்திரியே
போலீசுவந்திறங்கும்
போலீசுகையமர்த்த என்ராஜாவேமந்திரியே
பொருப்பாளியில்லையே
கட்டோடுவெற்றிலையே என்ராஜாவேமந்திரியே
காம்பழுகிப்போனாலும்
கட்டவிழ்த்துநீர்தெளிக்க என்ராஜாவேமந்திரியே
காரணவரில்லையோதான்
சாதியெனுமிச்சை என்ராஜாவேமந்திரியே
சமுத்திரத்துநீர்சார்ந்து

சாதியிலேபூர்க்காமே என்ராஜாவேமந்திரியே-நான்
தனிவழியேபூர்த்தேனே
கொடியெலுமிச்சை என்ராசாவேமந்திரியே
கொத்தளத்துநீர்வார்த்து
கும்பலிலேபூர்க்காமல் என்ராசாவேமந்திரியே
கொடிவிலகிபூத்தேனே
தாலிக்கிகல்லிழைத்து என்ராசாவேமந்திரியே
தாவாரம்கல்புதைத்து
தாலிகயிட்ட என்ராசாவேமந்திரியே
தருமருக்குஞ்சம்மதமோ
வாளிக்கிகல்லிழைத்து என்ராசாவேமந்திரியே
வாசலுக்குகல்புதைத்து
வாளிகயிட்ட என்ராசாவேமந்திரியே
வந்தபேர்க்குஞ்சம்மதமோ
கொப்புக்குகல்லிழைத்து என்ராசாவேமந்திரியே
கூடத்துக்குகல்லிழைத்து
கொப்புகயிட்ட என்ராசாவேமந்திரியே
கொரபேர்க்குஞ்சம்மதமோ
கடலைசெடலாக்கி என்ராசாவேமந்திரியே
கருங்கடலைமத்தாக்கி
சங்கிலிபூட்டி என்ராசாவேமந்திரியே
தயிர்கடையும்வேளையிலே
தரணியோர்போற்றும் என்ராசாவேமந்திரியே
தரிக்காமலெப்போது
தாலிபரிபோக என்ராசாவேமந்திரியே
தருமருக்குஞ்சம்மதமோ

கல்லிழைத்ததிண்ணையிலே என்ராசாவேமந்திரியே
பொன்னிழைத்தபாய்போட்டு
காரட்டெழுதி என்ராசாவேமந்திரியே
கடுதாசிமைதடவி
வாங்கியுடைத்து என்ராசாவேமந்திரியே
பதிலெழுதும்வேளையிலே
சீமைகடுதாசி என்ராராசவேமந்திரியே
சீக்கிரமாய்வந்துதோதான்
நருக்குகிருப்பலகை என்ராசாவேமந்திரியே
நாலுபுரம்கைபலகை
நாயகியாள்வீடுவந்தால் என்ராசாவேமந்திரியே
நாலுபுரம்கைபலகை
முருக்கிதிருப்பலகை என்ராசாவேமந்திரியே
மூனுபுறங்கைபலகை
முகத்தோடேமுகம்வைத்த என்ராசாவேமந்திரியே
முருங்கமரம்தேரசைய
பிணத்தைபிறட்டிவைத்து என்ராசாவேமந்திரியே
பேய்கரும்பைபுரட்டிவைத்து
பிணம்பார்க்கவந்தவர்கள் என்ராசாவேமந்திரியே
புருஷரைத்தானென்பார்கள்
செம்மானமிட்டு என்ராசாவேமந்திரியே
சிவந்தபழம்நிறுத்தி
வைரப்பெட்டியிலே என் ராசாவேமந்திரியே
வைத்தழைத்ததங்கமே
எப்போதும்போலே என்ராசாவேமந்திரியே
யிங்கிருக்கத்தேடுறேனே

## இரதிதேவி புலம்பல்.

தேக்கம்பலகைவெட்டி என்ராசாவேமந்திரியே
தேருஅலங்கரித்து
தேருக்குஉள்ளாக என்ராசாவேமந்திரியே
திருவிளக்காநிண்ணமூதேன்
நீங்கள்வீதிக்குவீதியல்லோ என்ராசாவேமந்திரியே
வெளியும்கிளம்பலியே
நீங்கள்வீமனில்லாவானம் என்ராசாவேமந்திரியே
வெளியும்கிளம்பலியே
சந்துக்குச்சந்து என்ராசாவேமந்திரியே
சதுர்பாணம்போட்டாலும்
சமர்த்தநில்லாவாண்மை என்ராசாவேமந்திரியே
சத்தமுங்கேட்கலியே
உள்ளுருதட்டான் என்ராசாவேமந்திரியே
உருவைத்தாலிபண்ணி
உருவுகயட்டணுமே என்ராசாவேமந்திரியே
ஒருகழுத்துஆகணுமோ
அஞ்சாருதட்டான் என்ராசாவேமந்திரியே
ஆணிவைத்துதாலிபண்ணி
ஆணிகயட்டணுமோ என்ராசாவேமந்திரியே
அரைக்கழுத்தியாகணுமோ
தங்கக்குடமெடுத்து என்ராசாவேமந்திரியே
தண்ணீர்க்குப்போகையிலே
தங்கரதம்கண்ட என்ராசாவேமந்திரியே
தவதாயம்நீங்கலியே
பொன்னுங்குடமெடுத்து என்ராசாவேமந்திரியே
பூவெடுக்கப்போனிடத்தில்

பொன்னூர தங்கண்ட என்ராசாவேமந்திரியே
போகவிடசம்மதமோ
பிறந்தப்போபோட்ட என்ராசாவேமந்திரியே
பொன்னுந்திருவானி
புண்ணியவான்வாசலிலே என்ராசாவேமந்திரியே
பொடிபொடியாகுதோதான்
தவிழ்ந்தப்போபோட்ட என்ராசாவேமந்திரியே
தங்கத்திருவாளி
தருமரிடவாசலிலே என்ராசாவேமந்திரியே
தவிடுபொடியாதோ
தோழிமார்பெண்களுடன் என்ராசாவேமந்திரியே
துரையாடப்போனாலும்
தோழிகுளிக்கையிலே என்ராசாவேமந்திரியே
தூரப்போய் நிற்கணுமே
கன்னிமார்பெண்களுடன் என்ராசாவேமந்திரியே
கடக்கப்போய்நிற்கணுமே
கன்னிகுளிக்கையிலே என்ராசாவேமந்திரியே
கடலாடப்போனாலும்
பத்துக்கால்முத்திழைத்து என்ராசாவேமந்திரியே
பழுதுபடாதூணிருத்தி
தூணிலமதிக்க என்ராசாவேமந்திரியே
துரைமாரைத்தேடணுமே
எட்டுகல்முத்திழைத்து என்ராசாவேமந்திரியே
யெழுதுபடாதூணிருத்தி
தூணிலமதிக்க என்ராசாவேமந்திரியே
துரைமாரைத்தேடணுமே

மல்லிகைப்பூந்தோட்டம் என்ராசாவேமந்திரியே
மருக்கொழுந்துபூர்க்குவனம்
பூர்க்குவனந்தேடி என்ராசாவேமந்திரியே
பொற்கொடியாள்வாரதெப்போ
குறவரிடவாசலிலே என்ராசாவேமந்திரியே
குடமல்லிவாசனையை
மறவரிடவாசலிலே என்ராசாவேமந்திரியே
மல்லிகைப்பூ பூத்தாலும்
மறவரறிவாரோ என்ராசாவேமந்திரியே
மல்லிகைப்பூவாசனையை
தேங்காய்க்கடிக்கணுமோ என்ராசாவேமந்திரியே
தேன்மிலைமேல்சாயணுமோ
பச்சைக்கடுக்கணுமோ என்ராசாவேமந்திரியே
பச்சிலைமேல்சாயணுமோ
பட்டுஉடுத்தியல்லோ என்ராசாவேமந்திரியே
பட்டினத்தேவந்தாலும்
பட்டுபளபளெங்கும் என்ராசாவேமந்திரியே
பட்டினமும்சிங்காரம்
காரைக்கால்சத்திரம் என்ராசாவேமந்திரியே
கல்லிழைத்தசாவடியாம்
புள்ளிஉருமாலை என்ராசாவேமந்திரியே
பூசைக்குசந்தனமாம்
தொட்டால்கரையுமென்று என்ராசாவேமந்திரியே
தூரப்போய்நின்றழுதேன்
பச்சைவளையலிட்டு என்ராசாவேமந்திரியே
பாக்குமரம்பந்தலிட்டு

பந்தலுக்குள்ளாக என்ராசாவேமந்திரியே
பாவிநான்வாழலியே
நீலவளையலிட்டு என்ராசாவேமந்திரியே
நெல்லிமரம்பந்தலிட்டு
நீதியுள்ளவாசலிலே என்ராசாவேமந்திரியே
நானின்றுதங்கிவாழலியே
ஓங்கிவழிநடந்தால் என்ராசாவேமந்திரியே
ஒழுங்கையிலேபூமணக்கும்
காய்ந்துவழிநடந்தால் என்ராசாவேமந்திரியே
காலையிலேபூமணக்கும்
காராமணிப்பயறு என்ராசாவேமந்திரியே
கடைபோட்டுவிற்றாலும்
சிந்தாமணிப்பயறு என்ராசாவேமந்திரியே
சிருங்குலையுமோதான்
நின்றால்நிழல்தெரியும் என்ராசாவேமந்திரியே
நீலமணிகூடத்தே
பார்த்தால்நிழல்தெரியும் என்ராசாவேமந்திரியே
பச்சைமணிகூடத்தே
காலன்வருமுன்னே என்ராசாவேமந்திரியே
கருத்தாலறியேன்தான்
கொள்ளைவருமுன்னே என்ராசாவேமந்திரியே
குடிக்காரன்சொல்லலியே
சீராகவாளெடுத்து என்ராசாவேமந்திரியே
செவ்வாய்க்கழுத்தறுத்தால்
மந்திரவாளெடுத்து என்ராசாவேமந்திரியே
வகைவகையாய்க்கழுத்தறுத்தாய்

## இரதிதேவி புலம்பல்.

கட்டிசுருட்டியல்லோ — என்ராசாவேமந்திரியே
    கடலிற்குதித்தாலும்
கள்ளிகுதித்தேனென்று — என்ராசாவேமந்திரியே
    கடலுந்திடலாகுமோதான்
வாசல்தலைமாட்டில் — என்ராஜாவேமந்திரியே
    வாலித்ததென்னமரம்
மண்டைநெருங்கலியே — என்ராசாவேமந்திரியே
    மாநெருங்கிகாய்க்கலியே
கொல்லைதலைமாட்டில் — என்ராசாவேமந்திரியே
    கொண்டுவந்ததென்னமரம்
குரும்பைநெக்கலையோ — என்ராசாவேமந்திரியே
    குலைநெருங்கிக்காய்க்கலியே
கடையோகடைத்தெருவோ — என்ராசாவேமந்திரியே
    கண்டுமடிபிடிக்க
தேரோதிருநாளோ — என்ராசாவேமந்திரியே
    தேடிமடிபிடிக்க
கரிவேலமரத்தடியே — என்ராசாவேமந்திரியே
    கருக்கருவாசாத்திவைத்தேன்
கருவேலமரம்வெட்ட — என்ராசாவேமந்திரியே
    கர்னனையுங்கொள்ளையிட்டேன்
தென்னங்குருத்தோலை — என்ராசாவேமந்திரியே
    தேரும்நடும்பொன்[illegible]
தேடிமணம்சூட்டணுமே — என்ராசாவேமந்திரியே
    தெருவிலிட்டுப்பார்க்கணுமே
வன்னக்குருத்தோலை — என்ராசாவேமந்திரியே
    வாசிக்கும்பொன்னைலே

ஆவணக் காப்பக நூலகம்
183340

வாசித்துப்பார்க்காமல் என்ராசாவேமந்திரியே
வழியிலிட்டுப்பார்க்கணுமே
சிமிளடைத்தமைபோலே என்ராசாவேமந்திரியே
சேர்ந்தோம்வெண்படி
சிமிளுடைந்துபோனவுடன் என்ராசாவேமந்திரியே
சேருவதுமெக்காலம்
முல்லையரும்போ என்ராசாவேமந்திரியே
முகமெல்லாம்பிஞ்சரும்போ
கொல்லையரும்போ என்ராசாவேமந்திரியே
கூடுவதுமெக்காலம்
வெள்ளுக்குளெண்ணைபோல என்ராசாவேமந்திரியே
இருந்தோம்சிலகாலம்
பிண்ணாக்குளெண்ணையென்று என்ராசாவேமந்திரியே
பிரிந்திருக்ககாலமாச்சே
ஒருநாளொருபொழுது என்ராசாவேமந்திரியே
உன்முகத்தைப்பாராமல்
கண்ணீரைவிட்டழுதேன் என்ராசாவேமந்திரியே
கலக்கங்களென்னுளெம்
காசிவளநாடு என்ராசாவேமந்திரியே
கல்லியாணமென்பார்கள்
கலியாணம்பார்ப்பேனோ என்ராசாவேமந்திரியே
கலந்திருக்கத்தேடுவேனோ
மூத்துமயிர்மாட்டி என்ராசாவேமந்திரியே
முந்தாணிபட்டெழுதி
முகத்தின்மேல்போட்டழுது என்ராசாவேமந்திரியே
முதலாளிதேடுகிறேன்

கதலிமயிர்மாட்டி என்ராசாவேமந்திரியே
கண்டாங்கிபட்டெழுதி
கட்டைமேல்போட்டழுது என்ராசாவேமந்திரியே
கருவாளிதேடுகிறேன்
பூத்தமொருபூண்டு என்ராசாவேமந்திரியே
நெருங்கிமுளைத்தாலும்
காய்த்தபூண்டு என்ராசாவேமந்திரியே
தரையில்முளைக்கணுமோ
தங்கத்தால்புஸ்தகந்தான் என்ராசாவேமந்திரியே
தாமரைக்கூடாரம்
தனித்துகணக்கெழுதும் என்ராசாவேமந்திரியே
தருமரைத்தேடுகிறேன்
பொன்னனைபுஸ்தகமாம் என்ராசாவேமந்திரியே
பித்தளைமைகூடாரம்
பிடித்துக்கணக்கெழுதும் என்ராசாவேமந்திரியே
புண்ணியரைத்தேடுகிறேன்
வாசலிலேபால்கிணறு என்ராசாவேமந்திரியே
வாயளவுநீர்சாக
வன்னமுகங்கழுக என்ராசாவேமந்திரியே
வையகத்தில்தேடுகிறேன்
தோட்டந்துரவாச்சு என்ராசாவேமந்திரியே
துடையளவுநீர்சாச்சு
துணிந்துமுகங்கழுக என்ராசாவேமந்திரியே
துறையேயுன்னைத்தேடுகிறேன்
பார்த்தபொழுதெல்லாம் என்ராசாவேமந்திரியே
பாதைக்கலங்காரி

கண்டபொழுதெல்லாம் என்ராசாவேமந்திரியே
கண்ணுக்கலங்காரி
கண்ணுக்குமுன்னாலே என்ராசாவேமந்திரியே
நரிவேஷமாகணுமோ
ஆரங்கிகாய்க்கும் என்ராசாவேமந்திரியே
அதிமதுரம்பிஞ்சிரங்கும்
பிர்க்கங்காகாய்க்கும் என்ராசாவேமந்திரியே
பெருமிளகுபிஞ்சிரங்கும்
முச்சாமந்தூங்கி என்ராசாவேமந்திரியே
முதற்சாமங்கண்ணுரங்கி
பிற்சாமமுள்ளமட்டும் என்ராசாவேமந்திரியே
நான்பேசத்துணையிழந்தேன்
பூவுமருக்கொழுந்தும் என்ராசாவேமந்திரியே
பொழுதோடேமண்ணுறங்கும்
பொற்கொடியாள்கண்ணுரங்க என்ராசாவேமந்திரி
யே பொழுதுவிலாசாயுமோதான்
ஒருநாள்பிரிந்தால் என்ராசாவேமந்திரியே
ஒருகோடிவார்த்தையுண்டு
நெடுநாள்பிரிய என்ராசாவேமந்திரியே
நெஞ்சந்துடிக்குதேதான்
தாளிசையும்பூவுதிரும் என்ராசாவேமந்திரியே
தங்கரதம்குலுங்கும்
தமயனார்பெற்றமகன் இந்தவீதியிலே
தனிப்பட்டார்கண்டீரோ
தேரசையும்பூவுதிரும் என்ராசாவேமந்திரியே
தென்றல்ரதந்துலங்கும்

## இரதிதேவி புலம்பல்.

தேவேந்திரன்பெற்றபிள்ளை இந்தவீதியிலே
 தெருபட்டார்கண்டீரோ
தேரசையும்பூவுதிரும் என்ராசாவேமந்திரியே
 வெள்ளிரதங்குலுங்கும்
விமலர்பெற்றமகன் இந்தவீதியிலே
 வெளிப்பட்டார்கண்டீரோ
கொள்ளிடத்துப்பாரிடத்தால் என்ராசாவேமந்திரி
 யே கும்பினியார்கட்டிவைப்பார்
கொடியாள்வயிறெரிய என்ராசாவேமந்திரியே
 கொண்டணைப்பார்யாருமில்லை
பாலுஞ்சலமதுபோல் என்ராசாவேமந்திரியே
 பதிந்திருந்தோம்வேணபடி
பாலும்நீரும்வேறாக என்ராசாவேமந்திரியே
 பரமசிவன்கட்டளையோ
கப்பல்வரபோகுதென்று என்ராசாவேமந்திரியே
 கரைமுகத்தைபார்த்திருந்தேன்
கரைமுகத்தைப்பார்த்தழுது என்ராசாவேமந்திரி
 யே கலக்கங்கள்கொண்டேனே
தோணிவரப்போகுதென்று என்ராசாவேமந்திரியே
 துரைமுகத்தைபார்த்திருந்தேன்
துரைமுகத்தைபார்த்தழுது என்ராசாவேமந்திரியே
 துயரங்கள்கொண்டேனே
சீமானுடவாசலிலே என்ராசாவேமந்திரியே
 சிகப்புவந்துநிற்குதிதோ
சிகப்பைவிலைமதிக்க என்ராசாவேமந்திரியே
 சீமானைத்தேடுகிறேன்

## இரதிதேவி புலம்பல்.

கோபுரவாசலிலே என்ராசாவேமந்திரியே
கொழுந்துவந்துாங்குதிதோ
கொழுந்தைவிலைமதிக்க என்ராசாவேமந்திரியே
கொற்றவரைத்தேடுகிறேன்
பொன்னைவிலைமதிக்கும் என்ராசாவேமந்திரியே
புண்ணியனூர்வீதியிலே
யென்னைவிலைமதிக்க என்ராசாவேமந்திரியே
யெத்தனைநாள்காத்திருந்தாய்

### வாழி.

நாராயணசாமிபிள்ளை மகாவிந்தையாயுரைத்த
பூவாளியுங்கதையும் ஆவலுடன்வாழியவே
மங்கைப்படையுடைய திங்கட்குடையுடைய
அங்கசனுமாதியும் மங்களமாய்வாழியவே
இக்கதையதனைச் சந்ததமும்வாசித்தோர்
அந்திவண்ணனருளால் சுந்தரமாய்வாழ்ந்திருப்பார்.

இரதிதேவி புலம்பல் முற்றிற்று.



வெண்பா.

கன்னலன்றி வேம்புநுகர் காமத்து ரோகியைப்போல்
பின்னையொரு தெய்வத்தைப் பேசாமே-என்னாளுஞ்
சாற்றுவதுங் காமகலை சாதிப்பதுங் காணப்
போற்றுவதுங் காமனடிப் போது.

உ

கடவுள் துணை.

மன்மதன் தகனமானபிறகு

# இரதிதேவி புலம்பல்.

## ஒப்பாரிக்கண்ணிகள்.

இரண்டாம்பாகம்.

---

### விநாயகர் துதி.

வெண்பா.

பிஞ்சு மதியணிந்த பெருமான்பாற் போர்புரிந்த
பஞ்சபாணன் பாரி பாடுதற்கு-எஞ்ஞான்றும்
பரிவுடனே தில்லைப் பதியதனில் வாழும்
கரிமுகவன் செஞ்சரணங் காப்பு.

### விநாயகர் ஒப்பாரி.

மண்டலங்கள் அஷ்டதிக்கு
மதிப்புசம்பு தீவுகளும்

மதித்ததோர் அம்பத்தியாரு
மதிப்பான தேசங்களும்
மதில்கொண்ட சோழபுரம்
மனதுசெங்கோல் செலுத்த
மார்க்கமா தான்செலுத்தம்
மாடிகளும் ஆஸ்த்தானம்
மாகருட பட்சக்கிரகணம்
மிதிக்கும்தில்லைச் சிதம்பரத்தில்
மகாதேரடி பிள்ளையறை
மனதில்யும்மை நிறுத்தி
மகாபூசை நான்செய்வேன்
வாகான யெள்ளுயெண்ணை
மஞ்சள் திரவியமும்
மதுதேனும் சர்க்கரையும்
வாசமுள்ள சந்தனமும்
மாதங்கி பத்திரிகோதா
வரும்யமுனை சரஸ்வதியே
மாதவர்க்குப் பெருகிவரும்
மலைக்காவேரி தீர்த்தம்
மண்டலத்து தீர்த்தமெல்லாம்
மனங்குளிர அபிஷேகம்
மயில்கொண்ணை வில்வம்பன்னீர்
மலர்செப்பு செம்பரத்தை

வாடாத அலரிபிச்சு
வகைவகையாய் கொண்டுவந்து
மணித்தாமரை நூல்யெடுத்து
மாற்றிர பூநாலும்
மார்பிலே தானணிந்து
மகாநைவேத்தியப் பட்டைச்சாதம்
மலரஅல்லா அலர்ந்தசம்பா
வாழைக்காய் கத்தரிக்காய்
வள்ளிக்கிழங்கு கடலை
மதிஅதிரசம் பணியாரம்
வட்டமிட்ட தோசையெள்ளு
வாகான அவல்கடலை
மற்றுமொரு மோதகமும்
வடைஅப்பம் இட்டலியும்
வாழை யிலைபோட்டு
வைத்தேன் பலகாரவடை
மத்தாப்பு வாலிபந்தம்
மங்கையர்கள் தாசியர்கள்
மதித்த புள்ளாங்குழலும்
மணதலத்தில் ஓசையிட
மணியடித்து தூபங்காட்டி
மலர் அஞ்சியெடுத்து அர்ச்சனை செய்து

மகாகணபதி யாயினமகா
மகித்தான தூபதீபம்
மானிட யேழையினால்
மரியாதை செய்ததெல்லாம்
மன்னித்துக் காப்பாற்றும்
மங்கைபார்வதி புத்திரா
வையகம் ஓரடிக்குள்
வைத்து அளந்தமாயோன்
மன்மதனார் தன்கதையை
மனமகிழ்ந்து நான்பாட
வாக்குத்தரவேணும் அய்யா
வஞ்சனைகள் யேவல்
மாராத சூனியம்
வைத்தாலும் யெதிராளி
வாய்அடக்கம் செய்தாலும்
ஐந்து கரத்தாலும்
அழகான பிள்ளையரே
யெட்டுக் கரத்தாலும்
யெடுப்பாயே பிள்ளையாரே

இரண்டாம்பாகம்

விநாயகர் ஒப்பாரிக்கண்ணிகள்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# இரதிதேவி புலம்பல்.

மூன்றாம்பாகம்.

---

காசியிலேநல்லமரம் என்ராசாவேமந்திரியே
கற்பூரங்காய்க்குமரம்

கூந்தல்பனையே குலைசாய்ந்தமாதளையே-நான்
காசிதவமிழந்தேன் கற்பூரம்சீர்குலைந்தேன்

செஞ்சியிலேநல்லமரம் என்ராசாவேமந்திரியே
சீரகங்கள்காய்க்குமரம் யென் பொன்னுவிளக்கே

பொழுதிரங்காபட்டணமே-நான்
செஞ்சித்தரையிழந்தேன்சீரகங்கள் சீர்குலைந்தேன்

எட்டுக்கால்கொப்பிழந்தேன் என்ராசாவேமந்திரியே
இருகாதும் பொன்னிழந்தேன்-யென்

ஆச்சாவைரமே அறுபதடிக்கம்பமே
பட்டுக்கயரே பணமிருக்கும்பெட்டகமே-நான்

இட்டுக்கயிட்டணுமோ உன்னுடையவாசலிலே
எட்டநின்று பார்க்கணுமோ

பத்துக்கல்கொப்பசைய என்ராசாவேமந்திரியே
பாவக்காய்கல்லசைய-யென்

கருத்தமுதலி காசாம்புமேனி
காமத்துரையே கைநிரைந்ததங்கமே-நான்

பார்த்துகயிட்டணுமோ உன்னுடையவாசலிலே
பக்கம்நின்று பார்க்கணுமோ

கும்பகோணசாலையிலே என்ராசாவேமந்திரியே
குரிபார்க்கபோனிடத்தே-யென்

கட்டிக்கரும்பே கணுவில்லாச்செங்கரும்பே
வித்தைகளஞ்சியமே விலைமதிக்காபாண்டியரே
குண்ணுமலைபோலயல்லோ கொற்றவரைகாணிழந்தே
மண்ணிற்கிணறுவெட்டி என்ராசாவேமந்திரியே
மருக்கொழுந்து தோப்பாக்கி-யென்

ஆக்கினைச்சக்கரமே அறுபதடிக்கம்பமே
பட்டுகிரமே பணத்துக்களஞ்சியமே

கிளிமுடிக்கும்பெண்ணரசி உன்னுடையவாசலிலே
கிளிபோலே வாடுகிறேன்
கல்லில்கிணறுவெட்டி என்ராசாவேமந்திரியே

கப்பமஞ்சள்தோப்பாக்கி-யென்
கூந்தல்பனையே குலைசாய்ந்தமாதளையே
புஷ்பச்சரமே பொன்காய்க்குமாமலையே-நான்
இழைச்சிகுளிக்கையிலே ஏமாந்துபோனேனே

ஆற்றிலேதண்ணிவந்தால் என்ராசாவேமந்திரியே
அதிகம்பெருக்குதென்பார்

குளத்திலே தண்ணிவந்தால்
குமிளியிட்டுப் பொங்குதென்பார்-நான்

உட்கிணத்தண்ணீர்போல் உள்ளங்குழம்புறேனே
ஓடுகால்மெட்டுகளும் என்ராசாவேமந்திரியே
உருண்டபவழரசம்-என்

ஆச்சாவைரமே அறுபதடிக்கம்பமே
பட்டுக்கயிறே பணம்பெற்றகுஞ்சரமே-இன்று

உருட்டுக்கயிட்டயிலே உடம்புந்துடிக்கிறதே
மூக்காணிக்குள்ளே என்ராசாவேமந்திரியே
மூடுந்திருமுகத்தே-என்

கருத்தமுதலியே காசாம்புமேனியரே-இது
ஆகாசம்பள்ளிகொண்ட அவுதிபழிதீராது
பூசைசெய்யுமண்டபத்தில் என்ராசாவேமந்திரியே
பார்க்குந்திருமேனி-யென்

கரும்புமொழியே கற்கண்டேசர்க்கரையே
பூசைமுடிந்ததுவோ பார்த்தகண்ணும்பொல்லாதோ
ஆசையுள்ளவாசலிலே என்ராசாவேமந்திரியே
அறிந்ததிருமேனியுனே-யென்

அழகுதுரையே அங்கமறிந்தவரே
ஆசைமுடிந்ததுவோ யன்புடையாள்வேம்பாச்சோ

அரும்பிழைத்தமோதிரமும் என்ராசாவே மந்திரியே
அரையிலுள்ளசில்லரையும்-என்

ஆச்சாவைரமே அறுபதடிக்கம்பமே
அதட்டிக்கயிட்டயிலே அங்கந்துடிக்கிறதே
நந்தவனம்பூந்தோட்டம் என்ராசாவேமந்திரியே
நடுக்கிணறும் சாவடியும்-என்

சிறுங்கருப்பாச்சி சிரிப்பும்வெறுப்பாச்சி
நாயகனார் ஆண்டவிடம் நாலுதிக்கும்பாழாச்சே
பூங்காவனம்பூந்தோட்டம் என்ராசாவேமந்திரியே

புதுக்கிணறும் சாவடியும்-நான்
நித்தங்கருப்பழிஞ்சேன் நெடுநாளுஞ்சீரழிஞ்சேன்
என்றுங்கருப்பழிஞ்சே னெக்காலஞ்சீரழிஞ்சேன்
புண்ணியனாராண்டயிடம் புதுக்கிணறும்பாழாச்சே
அதோதெரியுதுபார் என்ராசாவேமந்திரியே
அதிமதுரகோபுரங்கள்-என்

கூந்தல்பனையே குலைசாய்ந்தமாதளையே
சுத்துத்தெரியவில்லைஎங்கள் சுந்தரனார் பூந்தோட்டம்
அஞ்சுதலைநாகம் என்ராசாவேமந்திரியே
அடியிருக்குந்தாழியிலே-என்

வெள்ளிப்பணமே விலையில்லாபொன்மலையே
அஞ்சாமல்பூவெடுக்கும் அர்ச்சுனரைமாலையிட்டேன்
பூக்காமல்பூவெடுத்து என்ராசாவேமந்திரியே
பிரியமில்லா மாலைகட்டி-என்

அஞ்சாதுரையே ஆக்கினைச்சக்கரமே
மாலைமேல்குற்றமில்லை மாபாவிசெய்தகுற்றம்
சுணைமல்பூவெடுத்து என்ராசாவேமந்திரியே
இன்பமில்லா மாலைகட்டி-யென்

சித்திரத்தூணே சிலையேற்றும்ராசாவே-இந்த
மாலைமேல்தோஷமில்லை மாபாவிகுற்றமிது
குருமணிமொகடம்பூ என்ராசாவேமந்திரியே
கொள்ளடத்துதாழம்பூ-என்

உச்சிதப்பச்சையே உயர்ந்தவயிரமே-நான்
கோதிமுடிக்கையிலே கொலைக்காரனெங்கிருந்தான்
பதக்குமொகடம்பூ என்ராசாவேமந்திரியே
பட்டணத்துதாழம்பூ-யென்

தங்கநிறமே தனுசேந்தும்பாண்டியரே-நான்
பார்த்துமுடிக்கையிலே பழிகாரனெங்கிருந்தான்
அஞ்சிமலைசெஞ்சிமலை என்ராசாவேமந்திரியே
அதிநடுவே இஞ்சிமலை-யென்

கட்டுக்கயிறே கர்ப்பூரவாசனையே
செஞ்சிமலைதேனுடைக்க திருடனவனெங்கிருந்தான்
அஞ்சுவராகனல்லா என்ராசாவேமந்திரியே
அரக்குவைத்த மோப்புமல்லா-யென்

வெள்ளிநிலாவே வெண்கலத்துமண்டபமே
கொஞ்சுங்கிளிபிடிக்க கொடும்பாவியெங்கிருந்தான்

மஞ்சளரைக்காணி என்ராசாவேமந்திரியே
மல்லிகைப்பூ முக்காணி-யென்

கோட்டைதுரையே குடம்நிறைந்தபந்நீரே-எனக்கு
மஞ்சள்மருந்தாச்சே மல்லிகையும்புல்லாச்சே
இஞ்சியரைக்காணி என்ராசாவேமந்திரியே
எலுமிச்சங் காக்காணி-என்

ஆக்கினைச்சக்கரமே அறுபதடிக்கம்பமே
பட்டுக்கயறே பணமிருக்கும்பெட்டகமே
இஞ்சிகொண்டாராசாத்தி யிருந்துசிரைகாக்கனுமா
தென்னாடுதென்தேசம் என்ராசாவேமந்திரியே

என்னைபெற்றவர்கள் உற்றவர்கள்
பெரியகுடியானவர்கள்
தேவரடியார்கள் திகைதப்பிவந்தாலும்
பொன்போல்அமுதளிக்கும் பொறுமைதுரையே
யெங்கொளித்தாய்

காசிவளநாட்டார்கள் என்ராசாவேமந்திரியே
கலியாணமென்றுசொன்னால்

கற்பரயிருந்தவள் கரிகோலமானவள்நான் [னே
கலியாணம்பார்ப்பேனோ உன்னைக்கலந்திருக்கத்தேடுவ
செஞ்சிவளநாட்டார்கள் என்ராசாவேமந்திரியே
சீமந்தமென்பார்கள்

கற்புக்கிருந்தவள் கரிப்பாக்குதின்னவள்நான்
சீமந்தம்பார்ப்பேனோ உமைசேர்ந்திருக்கத்தேடுவனோ

வாளிக்கிகல்லிழைத்து என்ராசாவேமந்திரியே
வாசலிலே கல்புதைத்து-என்

எண்ணிறமே யிரும்பானமண்டபமே-நான்
தாலிகயிட்டுவது வந்தவர்க்குச்சம்மதமோ
தாலிக்குபூவிழைத்து என்ராசாவேமந்திரியே
இந்ததாவரங்கல்புதைத்து-என்

பூவுநிறமே பொழுதிரங்காபட்டணத்தே-நான்
தாலிகயிட்டுவது தருமருக்குச்சம்மதமோ
தரையசையபூவுதிர என்ராசாவேமந்திரியே
தங்கரதம் குலுங்க-என்

உச்சிதப்பச்சையே உயர்ந்தவயிரமே
ஸ்ரீமதுரையேநீர் வெளிப்பட்டங்கொண்டீரோ
காரைக்கால்சத்திரமாம்என்ராசாவேமந்திரியே
கல்லிழைத்தசாவடியாம்-என்

புள்ளியுருமாலே பூசியிருந்தசந்தனமும்
சாவடியைப்பாழாக்க சண்டாளனெங்கிருந்தான்
தென்னங்குறுத்தோலே என்ராசாவேமந்திரியே
தேரிலிடும் பொன்னோலே-என்

பெற்றாரைப்பெற்றவர்கள் பெரியகுடியானவர்கள்
தேடிமணஞ்சூட்டாமல் தெருவிலிட்டுபார்க்கணுமோ
வண்ணக்குருத்தோலே என்ராசாவேமந்திரியே
வாசிக்கும் பட்டோலே-என்

காமதுரையே கணையேந்தும்ராசாவே
வாசித்துப்பாராமல் வளவிவிட்டுப்பார்க்கணுமோ
சிமிளிவிட்டமைபோலே என்ராசாவேமந்திரியே
சேர்ந்துயிருந்தோமே

வித்தைகளஞ்சியமே வெள்ளிமகம்மேரே
இப்பிரிஞ்டைந்துபோனதினால் சேருவதுயெக்காலம்
முல்லையரும்பே என்ராசாவேமந்திரியே
மூகமெல்லாம் பிஞ்சரும்பே-யென்

பொன்னுக்குடமே பொழுதிறங்காபட்டணமே
கொல்லையரும்பே கூடுவதுமெக்காலம்
பத்துக்கால்முத்திழைத்து என்ராசாவேமந்திரியே
பழுதுபடா தூணிருத்தி-என்

ஆச்சாவைரமே அறுபதடிக்கம்பமே
தூணைவிலைமதிக்க துரைமாரைத்தேடுறேனே
எட்டுக்கால்முத்திழைத்து என்ராசாவேமந்திரியே
எழுந்துப்படா தூணிருத்தி-என்

கூந்தல்பனையே குலைசாய்ந்தமாதனையே
தூணைவிலைமதிக்க துரையைத்தேடுறேனே
கல்லிழைத்ததிண்ணையிலே என்ராசாவேமந்திரியே
காசகிறப் பாய்போட்டு-நீர்

காரட்டுயெழுதி கடுதாசிமைநடவி
வாங்கியுடைச்சி பதிலெழுதும்வேளையிலே
சிமைகடுதாசி சீக்கிரத்தில்வந்ததுவே

முந்திரிப்பூபூர்த்து என்ராசாவேமந்திரியே
முளகுபோல் பிஞ்சிரங்கி [தேன்

முதல்பிறந்ததங்கத்துக்கு மோசமில்லையென்றிருந்
பட்டுகையிறே பணம்பெற்றகுஞ்சரமே

முதல்பிறந்ததங்கத்துக்கு மோசம்வந்துநேர்ந்ததோ
கத்திரிபூபூர்த்து என்ராசாவேமந்திரியே
கடுகுபோல் பிஞ்சிரங்கி [ன்
கடைகுட்டிதங்கத்துக்கு கலக்கமில்லையென்றிருந்தே
பொன்னிழைத்தமண்டபமே பொழுதிரங்காப்பட்ட
கடைகுட்டிதங்கத்துக்கு கலகம்வந்துநேர்ந்த [ணமே

வெட்டாரவெளியிலேயும் என்ராசாவேமந்திரியே
வெள்ளரியால் நாற்றுவிட்டேன்

ஆச்சாவைரமே அறுபதடிக்கம்பமே
பட்டுக்கயறே பணம்பெற்றகுஞ்சரமே
முதல்பிறந்தவிசயருக்கு மோசம்வந்துநேர்ந்ததோ
கட்டார்தரையிலேயும் என்ராசாவேமந்திரியே
கத்திரியினட்டுவிட்டேன்-என்

கருத்தமுதலியே காசாம்புமேனியனே
கைநிறைந்ததங்கமே கணிவில்லாசெங்கரும்பே
கத்திரிகாய்க்குமுன் கலகம்வந்துநேர்ந்ததே

பொன்னால்அரிசிகுத்தி என்ராசாவேமந்திரியே
பொரையாரு வீதிசுத்தி-நான்

புண்ணியற்குமுன்னாலே பொங்கல்படைப்பதெப்
நாட்டுச்சவுக்கமே நாடாளும்ராசாவே [போ

கருணை துரைக்குநான் கையெடுத்துவைப்பதெப்போ
தங்கஅரிசிகுத்தி என்ராசாவேமந்திரியே
தலங்கம்பாடிவீதிசுத்தி-என்

ஆச்சாவைரமே அறுபதடிக்கம்பமே
பட்டுக்கயறே பணமதிக்குங்குஞ்சரமே-உனக்கு

வாழையிலைபோட்டு வகைவகையாய்கறிகள்வைத்து
கடகமிட்டகையாலே கன்னிபடைப்பதெப்போ
காதவழியிலையும் என்ராசாவேமந்திரியே
கன்னிடையர் ராச்சியங்கள்-உன்னை

காணவருவாருங் கைகட்டிநிற்பாரும்
பார்க்கவருவாரும் பதுங்கிநடப்பாரும்-நீங்கள்

வைச்சகருங்கப்பல் வழிகலங்கிநிற்குதிங்கே
ஆரவழியிலையும் என்ராசாவேமந்திரியே
துலுக்கருட ராச்சியங்கள்

வீமருடஅண்ணை விலைமதிக்கபாண்டியரே
நாங்கள்சுருக்கா வரவேணுமென்று
சொல்லிவிட்ட தோணிகப்பல்
கப்பல்கரைபுரண்டு கண்ணீர்கலக்குதிங்கே

வளநாடுதேசம் என்ராசாவேமந்திரியே-உன்
வாசலிலேவந்தாலே வளநாட்டுப்பட்சியைப்போல்

கற்புக்கிருந்தவள் கரிகோலமானவள்
நித்தங்கருப்பழிஞ்சேன் நெடுநாளும்சீரழிஞ்சேன்
நான் வயதுக்கழுதாலும் வயிற்றெரிச்சல்ஆரலியே
அம்பியைமல்லாத்தி என்ராசாவேமந்திரியே
அறைப்பார்கள் வையகத்தில்-என்

பொன்னுக்குடமே பொழுதிரங்காபட்டணமே
தர்மதுரையே தடைக்கஞ்சாபாண்டியரே

என்னைமனந்திருத்தும் எஜமானும்போனண்டி
நாடாளும்பாண்டியரே என்ராசாவேமந்திரியே
உனக்குநான் புலம்பும்ஒப்பாரி

நாராயணபிள்ளையெனும் நாவலனுந்தானியற்ற
திருச்சிமாமுண்டிபிள்ளை சொல்லும்பிழைதிருத்தி
ஆதிகேசவன்பத மனுதினம்போற்றிசெயும்
ஆதிகேசவன்பத மனுதினந்துதிசெயும்
பூமகள்விலாசம்பிரஸில் பதிப்பித்தாரே
நான் அழுதபாவனைபோல்

ஒப்பாரிக்கண்ணிகள்

மூன்றும்பாகம்-முற்றிற்று.

183840